2013 ஏப்ரல் 23]

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, கயத்தாறில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்து சென்று, ஆவன செய்யப்படும் என்று கூறியதற்கு நன்றி கூறி அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 304, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

304—

திருக்கோயில் புனரமைப்பு

***18558—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், அருள்மிகு அகஸ்தீஸ்வரர் அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோயிலைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், சிறுமருதூர் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின்

கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். ரூ.5 ஆயிரத்திற்கும்கீழ் ஆண்டு வருமானம் பெறும் இத்திருக்கோயில், பரம்பரை அறங்காவலர்களால் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது. திருக்கோயில் மிகவும் சிதிலமடைந்துள்ளதால், திருக்கோயிலிலிருந்த விக்கிரகங்கள் தற்போது ஒட்டுக்கொட்டகையில் வைக்கப்பெற்றுள்ளன. அவற்றிற்கு ஒருகால பூஜை மட்டும் நடைபெற்று வருகிறது. திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு நடத்திட ரூ.28 இலட்சம் வரை செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால், அரசு நிதி உதவியுடன், பொதுமக்களின் பங்களிப்புமூலம் திருப்பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், திருக்கோயில் திருப்பணிகள் விரைவில் செய்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாதான் பாரதத்தின் சொத்து, அவனியே எதிர்பார்ப்பது 110. தினமும் அறிவிக்கப்படுகின்ற திட்டங்களோ ஒப்பில்லா முத்து. விதி 110-ன்கீழ் தமிழகத்திற்குக் கிடைக்கும் முத்து முத்தான, சத்து சத்தான திட்டங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இனி, 110 கோடி மக்களுக்கும் கிடைக்கின்ற காலம் வரும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருள்மிகு அகஸ்தீஸ்வரர் அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்ற நல்ல செய்தியைச் சொன்ன மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, காவல் என்ற வார்த்தைக்கு கம்பீரம் தருவதே அம்மா அவர்களுடைய ஆட்சிதான் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமர்கின்றேன். வணக்கம்.